இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அவர்களைப் பார்த்துக் கூறியது: “உங்களிடையே முணுமுணுக்க வேண்டாம். என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். ‘கடவுள்தாமே அனைவருக்கும் கற்றுத் தருவார்’ என இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது. தந்தைக்குச் செவிசாய்த்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட அனைவரும் என்னிடம் வருவர். கடவுள்தாமே கற்றுத்தருவார் என்பதிலிருந்து தந்தையை எவராவது கண்டுள்ளார் என்று பொருள் கொள்ளக் கூடாது. (யோவான் 6:42-45)

# நல்ல அரசியல் உலகத் தலைவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம்!

## திருத்தந்தை வேண்டுகோள்

வத்திக்கான்: தங்கள் மக்களுக்குப் பணிபுரிப வர்களாக அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டும் என்பதற்காக இறைவேண்டல் செய்வோம் என ஆகஸ்ட் மாதத்திற்கான செபக்கருத்தில் அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆகஸ்ட் மாதத்திற்கான செபக்கருத்துடன் காணொளி ஒன்றை வெளியிட்டு, அதில் புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் வார்த்தைகளான, ‘அரசியல் என்பது பிறரன்பின் மிக உயரிய வடிவங்களுள் ஒன்று, ஏனெனில் அது பொதுநலனுக்காக உழைக்கிறது’, என்பதை மேற்கோள் காட்டியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வேலை வாய்ப்புகளை இழந்தவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, ஏழைகளின் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து பொதுநலனுக்காகவும், மனிதனின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்காகவும் அரசியல் தலைவர்கள் பணியாற்ற வேண்டும் என இறைவேண்டல் செய்ய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி அழைப்பு விடுக்கிறது.

இன்றைய உலகில் அரசியல் என்பது ஒரு நற்பெயரைக் கொண்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டும் திருத்தந்தை, ‘அரசியல் செய்வது’ என்ற எதிர்மறை அர்த்தத்தை விடுத்து உண்மையான அரசியல் என்பது, ஏழைகளுக்கும் வேலை வாய்ப்பற்றோருக்கும் பணிசெய்யும்போது அது மேலும் உன்னதமாகிறது என கூறியுள்ளார்.

எனவே அரசியல் தலைவர்களுக்காக நாம் இறைவேண்டல் செய்யும் அதேவேளையில்,



தங்கள் கடமைகளை செவ்வனே ஆற்றி, அதிகாரத்திற்காக அல்ல மாறாக மக்கள் பணிக்காக தங்களை அர்ப்பணித்து, பொது நலனுக்காக உழைக்கும் அரசியல் தலைவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம் என தன் செய்தியில் மேலும் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், உலக அமைதி கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ள இவ்வேளையில், மோதல்களைத் தீர்த்து நல்லிணக்கத்தை மீட்டெடுக்கும் நம்பிக்கையில், ஒலிம்பிக் கால அமைதியை அனைவரும் மதிப்பார்கள் என்று நான் ஆவலுடன் நம்புகிறேன் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

ஜூலை 25, இவ்வியாழனன்று 'பாரிஸ் 2024' என்ற ஹாஸ்டாக்குடன் வழங்கியுள்ள குறுஞ்செய்தியில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒலிம்பிக் கால அமைதியின்போது அதிகாரத்தில் இருப்பவர்களின் அனைவரின் மனசாட்சியை கடவுள் தெளிவுபடுத்தட்டும் என்றும் உரைத்துள்ளார்.

ஒலிம்பிக் கால அமைதிக்கான பாரம்பரியம் என்பது பண்டைய கிரேக்கத்தில் கிமு 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது. அனைத்துலக ஒலிம்பிக் அமைப்பு (IOC) பொதுவாக விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பண்டைய கருத்தை புதுப்பிக்க முடிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது

போர்நிறுத்தம் என்பது ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னும் பின்னும் ஒரு "சண்டை நிறுத்தம்" அறிவிப்பதைக் குறிக்கிறது. ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தும் நகரம் தாக்கப்படாமல் இருப்பதையும், விளையாட்டு வீரர்களும் பார்வையாளர்களும் பாதுகாப்பாக விளையாட்டுகளுக்குச் சென்று அமைதியாக அந்தந்த நாடுகளுக்குத் திரும்பலாம் என்பதையும் உறுதிசெய்கிறது இப்போர்நிறுத்தம்.

# பாமோல் தோட்டத்தில் புனித அன்னம்மாள் திருவிழா

குளுவாங்: இங்குள்ள பாமோல் தோட்டத்தில் 40ஆம் ஆண்டு புனித அன்னம்மாள் திருவிழா, கடந்த 27.7.2024, சனிக்கிழமை அன்று மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

‘இறைவேண்டல் செய்யக் கற்றுத் தாரும்’ எனும் மையக் கருத்தில் ஏழு நாள்கள் நவநாள் செபத்துடன் துவங்கப்பட்ட இத்திருவிழா, 27ஆம் திகதி மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னர்ட் போல் அவர்களின் தலைமையில் திருப்பலி கொண்டாடப் பட்டது. ஆயர் தமது மறையுரையில், புனிதர்கள் சுவக்கீம், அன்னா இருவரும் ஆண்டவருக்கு கீழ்படிந்து நடந்துள்ளார்கள் என்றும் அதே போல் தம் மகளான மரியாவையும் இறைவனுக்கு உகந்த மகளாக, இறை பக்தி உள்ளவராக, வளர்த்தார்கள் என்ற நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டார்



*ஆயர் பெர்னர்ட் போல் அவர்களுடன் அருள்பணியாளர்களும் ஏற்பாட்டு குழுவினரும்*

எனவே இயேசுவுக்கு தாத்தா பாட்டியாக இருந்த அவர்கள், நமக்கு குடும்ப பொறுப்பு, பிள்ளைகள் வளர்ப்பு, இறை நம்பிக்கை, அன்பு போன்றவற்றை நமக்கு எடுத்துரைக்கும் புனிதர்களாக உள்ளனர் என்றார். அவர்களின் சிறப்பு ஆசீர்பெற்று தூய வாழ்க்கை வாழ இன்றைய திருவிழா நம்மை அழைக்கிறது என கூறினார்.

அத்தோடு அன்று வந்த தாத்தா பாட்டிமார்களையும் ஒவ்வொரு குடும்பத்தையும் இறைவேண்டலோடு ஆசீர்வதித்தார். சுமார் 1000 நம்பிக்கையாளர்கள் சுற்று வட்டாரத்தில் இருந்து வருகை தந்து இவ்விழாவில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயரின் இறை ஆசிரோடும் விழா குழு தலைவர் அந்தோனி அவர்களின் நன்றியுரையோடும் கொண்டாட்டம் ஒரு முடிவை எய்தியது.

இந்த 40-ம் ஆண்டுவிழா அடுத்து 50-ம் ஆண்டைத் தொடும் என்ற நம்பிக்கையில் இரவு விருந்துபசரிப்பில் கலந்து புனித அன்னம்மாளின் சிறப்பு ஆசீரையும் பெற்ற மகிழ்ச்சியில் அனைவரும் அவரவர் இல்லம் திரும்பினர் .

*ஆ.வி.டேவிட், குளுவாங்*

# 2023-இல் ஏறத்தாழ 73 கோடியே 30 இலட்சம் மக்கள் பசியுடன் வாழ்ந்துள்ளனர்!

வத்திக்கான்: கடந்த 2023-ஆம் ஆண்டில், ஏறத்தாழ 73 கோடியே 30 இலட்சம் மக்கள் பசியுடன் வாழ்ந்தனர் என்றும், இதில் உலகளவில் 11 பேரில் ஒருவரும் ஆப்பிரிக்காவில் மட்டும் 5 பேரில் ஒருவரும் அடங்குவர் என்றும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம், சிறார் நிறுவனம், விவசாய மேம்பாட்டுக்கான அனைத்துலக நிறுவனம், உலக உணவுத் திட்ட நிறுவனம், உலக நல நிறுவனம் ஆகிய ஐந்து ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிறுவனங்களால் ஜூலை 24, புதனன்று 'உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை' (SOFI) என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையில் இத்தகவல் வழங்கப்பட்டுள்ளது.

உலகளவில் ஏறத்தாழ 233 கோடி மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர் என்றும், இவர்களில், ஏறக்குறைய 86 கோடியே 40 இலட்சம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப் பட்டனர் என்றும் எடுத்துக்காட்டும் இவ்வறிக்கை, இம்மக்கள் சில வேளைகளில் ஒரு நாள் முழுவதும் அல்லது அதற்கும் மேலாகவும் உணவு இல்லாமல் தவித்தனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில், குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டின் வழக்குகள் உலகளவில் மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளது (5 கோடியே 5 இலட்சம் அளவிற்கு) என்றும், உலகளவில் ஐந்து வயதுக்குட்பட்ட நான்கில் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதியுறுகிறது என்றும் குறிப்பிடுகிறது அவ்வறிக்கை.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, உலகம் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ளதால் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை குறைவதற்கான அறிகுறியே இல்லை என்றும் கவலையுடன் உரைக்கிறது அவ்வறிக்கை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# கேரளாவின் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரழப்பு 200

கேரளா : இங்குள்ள தென்னிந்தியாவின் கேரளாவிலுள்ள வயநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் ஜூலை 30, இச்செவ்வாய் அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 200 பேர் வரை உயிரிழந்ததாக தினத்தந்தி செய்தி தெரிவிக்கிறது.

மேலும், இந்நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட 195 பேர் மாநிலத்தின் பல்வேறு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், வயநாடு மாவட்டம் முழுவதும் கனமழை பெய்து வரும் வேளை, மேலும் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து உள்ளதால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்கள் செல்ல மாநில அரசு தடை விதித்துள்ளது என்றும் அரசின் செய்திக் குறிப்பு உரைத்துள்ளது..

மக்கள் உறங்கிக் கொண்டிருந்த போது அதிகாலை 2 மணியளவில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாகக் கூறியுள்ள வயநாடு மேப்பாடி புனித யோசேப்பு திருத்தல அருள்பணியாளர் ஆபிரகாம் அவர்கள், இறந்தவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாடு, ஒடிசா மற்றும் சத்தீஸ்கரில் இருந்து புலம்பெயர்ந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

மேலும், சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த நிலச்சரிவில் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது என்றும், மழை தொடர்ந்து பெய்து வருவதால் நிலைமை மிகவும் ஆபத்தானதாக உள்ளது என்றும் அச்செய்தி நிறுவனத்திடம் கவலையுடன் தெரிவித்துள்ளார் .

# 'தூய ஆவியின் உடனிருப்பில் உரையாடல் வழி பகுத்தறிதல்'

## வட்டார தீபகற்ப மலேசியா பேரவை 2024

## தொடர் விளக்கக் கட்டுரை

நடைபெறவுள்ள தீபகற்ப மலேசிய வட்டார மேய்ப்புப்பணி பேரவையில் (R P A ) பங்கேற்போர், அவர்களின் வருகைக்கு முன்னதாகவே, ஆன்மீக ரீதியில் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருப்பார்கள். மேலும், சில வாரங்களுக்கு முன்னதாக இருந்தே இந்த வட்டார மேய்ப்புப்பணி பேரவையில் பின்பற்றப்படும் "ஆன்மாவில் உரையாடல்" (CS) செயல்முறைகளை ஆய்ந்துணர்ந்திருப்பார்கள்.

மேற்கண்ட தீபகற்ப மலேசிய வட்டார மேய்ப்புப்பணி பேரவையில் (RPA) பயன் படுத்தப்படும் "ஆன்மாவில் உரையாடல்" (CS) செயல்முறைக்கு மூன்று சுற்றுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

தொலைதூரத்தில் தங்களைத் தயார் படுத்திக் கொண்டார்கள் மற்றும் RPA க்கு வருவதற்கு சில வாரங்களுக்கு முன்பே தங்கள் பகுத்தறிவு செயல் முறையைத் தொடங்கியிருக்கலாம். RPA இன் போது பயன்படுத்தப்படும் "ஆன்மாவில் உரையாடல்" (C S ) செயல்முறையில் மூன்று சுற்றுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

வழங்கப்பட்ட ஒரு கேள்வியையொட்டி குழுப் பகிர்வும் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படும். அனைவரும் மௌன இறைவேண்டலில் தங்களைத் தயாரிப்பர்.

*(பத்து நிமிடத்திற்குப் பின் ஒன்றுகூடுவர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வழிநடத்துனர் மற்றும் குறிப்பு பதிவுச் செய்யும் நபர் நியமிக்கப்படுவார்)*

### முதல் சுற்று: குழுவில் அமர்தல்

ஒவ்வொருவரும் தங்களின் பகிர்தலைத் தயாரித்து எழுதிக் கொண்டு வருவார்கள். கொடுக்கப்பட்ட கேள்வியின் அடிப்படையில் அவர்கள் தங்கள் அனுபவங்கள், உணர்வுகள் அல்லது அவர்களின் பகுத்தறிவு நேரத்தில் என்ன நடந்தது என்பதைப் ஏறக்குறைய இரு நிமிடங்களுக்குள் பகிர்வர். ஒருவர் பகிர்ந்த பிறகு, கூறப்பட்டதை உள்வாங்குவதற்கு குழு சிறிது நேரம் எடுத்துக்கொள்ளலாம். அமைதி: அனைவரும் பகிர்ந்த பிறகு, பகிரப்பட்டதை உள்வாங்குவதற்கு வழிநடத்துனர் மௌனத்திற்காக ஒரு சிறு நேரத்தை வழங்கலாம். ஒருவர் தனக்குள்ளும், மற்றவருக்குள்ளும், குழுவிற்குள்ளும் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இந்த மௌன நேரம் உதவியாக இருக்கும்.

### இரண்டாவது சுற்று: மற்றவர்களுக்கு வாய்ப்பளித்தல்

இரண்டாவது சுற்றில், பங்கேற்பாளர்கள் மௌன நேரத்தின்போது தங்களுக்குள் வெளிப்பட்டதை பகிர்ந்து கொள்வர். ஒவ்வொருவரும் கருத்துரைக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

இது, மேலே கூறப்பட்ட கருத்துக்ளை ஒட்டியோ, வெட்டியோ அல்லது மறுத்தோ விவாதிப்பதற்கான நேரமில்லை.

மாறாக, மற்றவர்கள் கூறிய கருத்துக்களில் என்னைப் பாதித்தது என்ன?

நான் கேட்டது எப்படி என்னை பாதித்தது?

எந்த ஒரு குறிப்பிட்ட பகிர்வு என்னை மிகவும் கவர்ந்தது? போன்றவையொட்டி அலசிப்பார்த்தல்.

### மூன்றாவது சுற்று: ஒன்றாக உருவாக்குதல் ( "நான்" முதல் "நாம்" வரை)

பங்கேற்பாளர்கள் முந்தைய மௌன தியானத்தில் வெளிப்பட்டதைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இது "நாம்" எனும் ஒருமித்த கருத்துக்கு வரும் நேரம்.

தலைப்பைப் பொறுத்தவரை நமக்கும் முழு திருஅவைக்கும் என்ன அறிவுறுத்துவது முக்கியம் என்று நாம் நினைக்கிறோமா?"

இந்த முறை, வழிநடத்துனர் பங்கேற்பாளர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களை பேரவையின் பலனாக எதைத் தேர்வு செய்வது ("தொகுப்பு") என்பதில் ஒருமித்த கருத்தை ஆராய்வர்.

தொடரும்...

# நற்கருணை-நம் ஆன்மீகத்தின் அச்சாணி

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 19-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். ஒவ்வொரு திருப்பலியிலும் நற்கருணையை ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் உடலாகப் பெற்றுகொள்ளும் நாம் ஒவ்வொருவரும் நற்கருணைக்கு வணக்கமும் ஆராதனையும் செலுத்தவும், நற்கருணையில் உண்மையாகவே இயேசுவின் பிரசன்னம் உள்ளது என்பதில் நம்பிக்கைக் கொண்டு, நற்கருணை நம் வாழ்வின் ஊற்றும் உச்சமுமாய் எண்ணி வாழவும் அழைக்கப்படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் எலியா தன்னுடைய உயிரை எடுத்துக்கொள்ளுமாறு இறைவனிடம் வேண்டினார். ஆனால் கடவுள் அவர் கேட்டதைத் தராமல் அவருக்குத் தேவையான ஒன்றை அளித்தார். வானதூதர் அளித்த அப்பத்தால் அவர் நாற்பது நாட்கள் நடந்து ஆண்டவரின் மலைக்குச் செல்லும் வலிமை பெற்றார். திருப்பாடல் ஆசிரியரும் ஆண்டவரை சுவைத்துப் பார்க்க நம்மை அழைக்கிறார். எந்த ஒரு உணவும் நாம் தனிப்பட்ட வகையில் அனுபவித்தால் தான் ருசியை கண்டுகொள்ளமுடியும். ஆண்டவரும் அதுபோலத் தான். நாம் தான் அவரை தனிப்பட்ட வகையில் சுவைத்து அனுபவிக்கவேண்டும்.

இன்றைய நற்செய்தியில் இயேசுவின் போதனை யூதமக்களுக்கு ஒருவித குழப்பத்தை ஏற்படுத்தியது. நம் கண்ணால் பார்த்த ஒரு நபர் எவ்வாறு வானினின்று இறங்கிவந்தவர் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளமுடியும்?

இன்றைய மருத்துவ உலகில் ஒருவரின் உயிரைக் காப்பாற்ற வேறு ஒரு மனிதரின் இரத்தம் தேவைப்படுகிறது. மனிதரின் இரத்தமே ஒருவரின் உயிரைக் காப்பாற்றமுடியுமென்றால் நம்மை மீட்க மனித உடலெடுத்து வந்த இறைமகனின் உடலும் இரத்தமும் கண்டிப்பாக நம் ஆன்மீக உணவாக மாறமுடியுமென்பதைத் தான் எத்தனையோ அற்புதங்கள் வழியாக நாம் கண்கூடாக காண்கிறோம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆண்டவரின் பேழையில் கடவுளின் உடனிருப்பை அனுபவித்து ஆண்டவரைப் பணிந்தனர். ஆனால் இப்போது அப்ப வடிவில் இயேசுவின் உடனிருப்பு நம் மத்தியில் உள்ளதை நாம் அனுபவிக்கின்றோமா?, உணர்கின்றோமா?, நற்கருணையில் முழு நம்பிக்கை வைக்கின்றோமா? "நானே வானினின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு" என்று இயேசு வாக்களித்த வார்த்தை உண்மையானது என்று நம்பிக்கை கொள்வோம். நம் வாழ்வின் ஊற்றும் உச்சமுமாய் இருக்கிற திருப்பலியும் நற்கருணையும் நம் ஆன்மாவின் அச்சாணியாய் மாறட்டும்.

### பொதுக்காலம்-19-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம் | 1அர 19: 4-8 |
| திரு.பாடல் | 34: 1-2. 3-4. 5-6. 7-8 |
| 2-ம் வாசகம் | எபே 4: 30- 5: 2 |
| நற்செய்தி யோவான் | 6: 41-51 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**

**திருப்புகழ் மாலை- வாரம் 3**

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

### புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு 15-8-2024

| | |
|---|---|
| முதல் வாசகம் | திவெ 11: 9a;12:1-6, 10 |
| பதிலுரு பாடல் | 45: 9. 10-11. 15 |
| 2-ம் வாசகம் | 1கொரி 15: 20-26 |
| நற்செய்தி | லூக்கா 1: 39-56 |

மரியன்னையின் விண்ணேற்பு விழா என்பது உலகிலுள்ள அனைத்துக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாலும் கொண் டாடப்படக்கூடிய ஒரு பெருவிழா. இது கடன் திருநாளுமாகும். இயேசுக்கிறிஸ்து தனது தாயாரை நம் அனைவருக்கும் தாயாக இவ்வுலகில் விட்டுச் சென்றார். "பெண்களுக்குள் ஆசிர்வதிக்கப்பட்ட தாய்", "அருள் நிறைந்த பெண்மணி" என்று பெண்குலத்திற்கு மட்டுமல்லாது உலகத்தில் உள்ள தாய்மார்களின் செல்வமாகத் திகழ்பவள்தான் நம் மரியன்னை. எனவே அப்படிப்பட்ட அன்னையின் விழாவைக் கொண்டாடுகிற இவ்வேளையில் அவள் நமக்கு தரும் செய்தியைச் சிந்தித்துப் பார்ப்போம்